முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**முன்னிலை:திரு.ஆர்.சண்முகசுந்தரம், பி.காம், எல்.எல்.பி.,**

முதன்மை மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.

2021ம் ஆண்டு நவம்பர் மாதம் 20ம் நாள் சனிக்கிழமை

**O.S.No. 28/2021**

(CNR No.TNRM01001499-2021)

*****

1. ராமமூர்த்தி.
2. பானுமதி.
3. ராஜகுமாரி.
4. ராதிகா ... **வாதிகள்**

**/எதிர்/**

1. உமா மகேஸ்வரி
2. ரம்யாதேவி
3. யோகராணி.
4. நரேந்திரராஜா
5. நாகேஸ்வரி ... **பிரதிவாதிகள்**

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என் முன்பாக 07.10.2021ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு.B.கணேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரின்மையால் வாதிகள் தரப்பு வாதுரை, சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் நன்கு பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

வாதிகள் தாவா வழக்கு சொத்தில் வாதிகளுக்குரிய ½ பாக சொத்தை நயமிடர் பார்த்து பிரித்து பிரதிவாதிகள், வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க ஒரு முதல்நிலை

தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், வாதிகளின் செலவுத்தொகையுடன் தீர்ப்பு வழங்க கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்கின் சுருக்கம்:**

தாவாச்சொத்தானது ஆதியில் ராக்கப்பன் சேர்வை மற்றும் அவரது உடன் பிறந்துவர்களுக்கு பாத்த்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி ராக்கப்பன் சேர்வை இறந்தவுடன் அவரது மனைவி பார்வதி அம்மாளுக்கு, ராக்கப்பன் சேர்வையின் உடன் பிறந்தவர்கள் எழுதிவைத்த ஆவணத்தின் மூலம் தாவா சொத்தானது பார்வதி அம்மாளுக்கு முழு பாத்தியப்பட்ட சொத்தாகும். வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் முன்னோரான ராக்கப்பன் சேர்வை – பார்வதி அம்மாளின் மகன் முனி என்ற ரமணி என்பவரே மேற்படி பார்வதி அம்மாளுக்கு சட்டப்படியான வாரிசாக இருந்து வந்தார். மேற்படி ராக்கப்பன் சேர்வை இறந்த பின்னர் அவரது வாரிசுகளான பார்வதி அம்மாள், மகன் முனி என்ற ரமணி எந்தவித வில்லங்கமும் இன்றி அனுபவம் செய்து வந்தனர். மேற்படி பார்வதி அம்மாள் தனது மகன் முனி என்ற ரமணியின் எதிர்கால நலன்கருதி தனக்குசேரவேண்டிய பாதி பாத்தியதையை 13.07.1970 அன்று இராமநாதபுரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திர ஆவண எண். 1950 /1970 மூலம் முழுமையாக பாத்தியப்படுத்தியுள்ளார். அதனைத் தொடர்ந்து முனி என்ற ரமணி தாவா சொத்தை முழு அனுபவம் செய்து வந்தார். முனி என்ற ரமணி அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றார். முனி என்ற ரமணி தனது சுய சம்பாத்தியத்தின் மூலம் கெட்டி மச்சு வீடு கட்டி நல்லமுறையில் அனுபவம் செய்து வந்தார். முனி என்ற ரமணி கடந்த 23.06.2011 அன்று தனது 92 வயதில் மரணம் அடைந்து விட்டார். 1 ஆம் வாதி, 5 ஆம் பிரதிவாதி, ரகுநாதன் மற்றும் ரவீந்திரன்

ஆகியோர் முனி என்ற ரமணியின் வாரிசுதாரர்களாக வாரிசுப்படி அடைந்து தங்களது பொதுப்பாத்திய அனுபவத்தில் வைத்து அனுபவம் செய்து வந்தார்கள். தாவா சொத்திற்கு இதுநாள்வரை முனி என்ற ரமணி பெயரிலேயே வரி வகையறாக்கள் ஏற்பட்டு வருவாய் ஆவணங்களிலும், அவர் பெயரிலேயே மின் இணைப்பு ஏற்பட்டு ஆவணங்கள் இருந்து வரும் நிலையில் தாவா சொத்து முனி என்ற ரமணி வாழ்ந்து வந்த காலத்தில் தரைத்தளம் மட்டுமே கொண்ட தாரிசு வீடாக இருந்து வந்தது. தாவா சொத்தின் தரைத்தளத்தில் ரகுநாதன் மற்றும் 5–வது பிரதிவாதியும் கூட்டு சேர்ந்து கொண்டு மற்ற வாரிசுதாரர்களுக்குரிய பாகப்பங்கு உரிமையை மோசடி செய்யும் நோக்கத்துடன் செயல்பட்டு வந்தார்கள். மேலும் தரை தளத்தை இரண்டாக பிரித்து அதில் ஒரு பகுதியினை கடந்த 20 வருடங்களாக ரகுநாதன் தன்னிச்சையாக ஆக்கிரமிப்பு செய்து ராதிக தையலகம் என்ற பெயரில் தனது மனைவி மூலம் நடத்தி வந்ததுள்ளார். தாவா சொத்தின் தரைதளத்தின் மற்றொரு பகுதி முழுவதிலும் தற்போது வரை கடந்த 29.10.2018 அன்று காலமான ரகுநாதன் மனைவியும், 1வது பிரதிவாதியுமான உமா மகேஸ்வரியும், 2 முதல் 4வது பிரதிவாதிகளும் குடியிருந்து அனுபவித்து வருகிறார்கள். இந்நிலையில் 2வது வாதியின் கணவரும், மற்றும் 3,4 வாதிகளின் தந்தையான ரவீந்திரன் மற்றும் 1வது வாதியான ராமமூர்த்தி ஆகிய நபர்களும் தங்களுக்குரிய பாகப்பங்கு உரிமையை கேட்டு முயற்சித்தபோதெல்லாம் 1 ஆம் பிரதிவாதியின் கணவரும், 2 முதல் 4 ஆம் பிரதிவாதிகளின் தந்தையான ரகுநாதன் மற்றும் 5வது பிரதிவாதி ஆகியோரும் கூட்டாக சேர்ந்து பாக பங்கு உரிமைகளை தர மறுத்து வந்ததால் மேற்படி ரவீந்திரன், ராமமூர்த்தி ஆகிய இருவரும் அவர்களது சுய சம்பாத்தியத்தின் மூலம் தாவா சொத்தின் முதல் தளத்தில் ரூ.10 லட்சம்

செலவு செய்து இரண்டு வீடுகளை அருகருகே கட்டி மேற்படி ரவீந்திரன் மற்றும் ராமமூர்த்தி இருவரும் குடும்பத்துடன் குடியிருந்து வந்தார்கள். இந்நிலையில் 03.01.2015 ஆம் தேதியன்று இரவீந்திரன் இறந்த பின்னர் அவரது சட்டப்படி வாரிசுகளான 2 முதல் 4 வாதிகள் அனுபவம் செய்து வந்தார்கள். 1 வது வாதியான ராமமூர்த்தி BSNL அலுவலகத்தில் JTO ஆக பணிபுரிந்து ஓய்வு பெற்றார். பாகப்பங்கு உரிமையின் அடிப்படையில் பிரதிவாதிகள், வாதிகளுக்குச் சேரவேண்டிய பணப்பலன்களை கொடுக்காமல் இருந்து வருகிறார்கள். தாவா சொத்திற்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பெயரில் கூட்டுப்பட்டா பெறப்பட்டுள்ளது. 2 ஆம் வாதியும் அவரது கணவர் இறந்தபிறகு திருமணமாகாத 4 ஆம் வாதியுடன் கஷ்ட ஜீவனம் நடத்தி வருகிறார். வாதிகள் சுய சம்பாத்தியத்தில் தாவா சொத்தின் முதல் தளத்தில் கட்டிய வீட்டில் குடியிருந்து அனுபவம் செய்வதற்கு பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்து வருகிறார்கள். தாவா சொத்தில் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு கிடைக்க வேண்டிய பாகப்பங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வாதிகள் தாவா சொத்தினை பாகப்பிரிவினை செய்து கொள்ள வேண்டி ஊர் பெரியோர்கள் மூலம் சமரச பேச்சு வார்த்தை நடத்தியும் பிரதிவாதிகள் கட்டுப்படாமல் காலம் தாழ்த்தி வந்ததால் , வாதிகள் கடந்த 08.02.2021 அன்று பிரதிவாதிகளுக்கு பாகம் பிரித்து தர வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பினை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் எவ்வித பதில் அறிவிப்பும் அனுப்பவில்லை. எனவே தாவா வழக்கு சொத்தில் வாதிகளுக்குரிய ½ பாக சொத்தை நயமிடர் பார்த்து பிரித்து பிரதிவாதிகள், வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க ஒரு முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், வாதிகளின் செலவுத்தொகையுடன் தீர்ப்பு வழங்க கோரி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1 முதல் 5 பிரதிவாதிகள் நீதிமன்ற அழைப்பாணை பெற்ற பிறகும் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்து வந்ததால் பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

4. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ 1 முதல் 20 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் எழுத்துப்பூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த வழக்குரை, ஆவணங்கள், வாய்மொழி சாட்சியம் மற்றும் எழுத்துப்பூர்வமான வாதுரை பார்வையிடப்பட்டது. வாதிகள் தரப்பு வாதம் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

6. இவ்வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனைகள் யாதெனில்

1. வாதிகளின் வழக்குரையில் கோரியுள்ளபடி வழக்கு சொத்தில் வாதிகளுக்குரிய 1/2 பாகம் சொத்து வாதிகளுக்கு கிடைக்க கூடியதா?

2. வாதிகள் கோரியபடி முதல் நிலை தீர்ப்பாணை பெற தகுதியுடையவர்களா?

3. வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன ?

வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வாதிகளுக்குரிய 1/2 பாகத்தை பாகப்பிரிவினை செய்து தரக்கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். வாதி வழக்குரையில் கோரியுள்ளபடி வழக்கின் சொத்துக்கள் வாதிகளின் தகப்பனார் முனி என்ற ரமணிக்கு சொந்தமானது ஆகும்.

**7. பிரச்சனை எண். 1.**

வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் வழக்கு சொத்து ராக்கப்பன் சேர்வை என்பவருக்கும் அவருடன் பிறந்த சகோதரர்களுக்கும் பாத்தியப்பட்டது

என்றும், ராக்கப்பன் சேர்வை இறந்தவுடன் அவரது மனைவி பார்வதி அம்மாளுக்கு ராக்கப்ப சேர்வையின் உடன் பிறந்தவர்கள் சட்டப்படி எழுதி வைத்த ஆவணத்தின் மூலம் பார்வதி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்கண்ட பார்வதி அம்மாளுக்கு முனி என்ற ரமணி சட்டப்படி வாரிசு என்றும், பார்வதி அம்மாள் தனது மகனான முனி என்ற ரமணிக்கு 13.07.1970 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலம் விடுதலை பத்திரம் செய்து கொடுத்துள்ளார் என்றும், அதுநாள் முதல் முனி என்ற ரமணி தாவா சொத்தை முழு பாத்தியத்துடன் அனுபவம் செய்து வந்தார் என்றும், முனி என்ற ரமணி 23.06.2011 அன்று இறந்துவிட்டார் என்றும், முனி என்ற ரமணி உடைய வாரிசுகளான 1 ஆம் வாதியும், 5 ஆம் பிரதிவாதியும், ரகுநாதன் மற்றும் ரவீந்திரநாதன் ஆகியோர் எனவும், மேற்கண்ட ரகுநாதன் என்பவர் 1 முதல் 4 பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்றும், 03.01.2015 அன்று மேற்படி ரவீந்திரநாதன் என்பவரும் 2 முதல் 4 வாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்றும், முனி என்ற ரமணியின் மகன் 1 ஆம் வாதிக்கு 1/4 பங்கும், 2 முதல் 4 வாதிகளுக்கு 1/4 பாகமும் ஆக மொத்தம் வாதிகளுக்கு தாவா சொத்தில் 1/2 பாகம் உரிமை உள்ளது என்றும், பிரதிவாதிகளில் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1/4 பங்கும், 5 ஆம் பிரதிவாதிக்கு 1/4 பங்கு பாகம் உள்ளது என்றும், வாதிகள் பாகம் பிரிப்பதற்கு பிரதிவாதிகளுக்கு 08.02.2021 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், பிரதிவாதிகள் பாகம் பிரிவினை செய்து கொடுக்க முன்வரவில்லை என்பதால் வாதிகளால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் வாதிகள் தரப்பில் வாதிடப்பட்டது.

7.வா.சா.1–ன் சாட்சியத்திலிருந்தும், வா.சா.ஆ.1 ஆவணத்திலிருந்தும், வழக்கு சொத்தைப்பொருத்து பார்வதி அம்மாள் அவருடைய மகன் ஆன முனி என்ற ரமணிக்கு பதிவு செய்யப்பட்ட பாக பாத்திய விடுதலை ஆவணத்தின் மூலம் பாக விடுதலை செய்து கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது. வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் தாவா சொத்து முனி என்ற ரமணிக்கு பாத்தியப்பட்டது என்பதை வாதிகள் நிலைநாட்டி மெய்ப்பித்துள்ளனர். அதனை முரண்படுத்தும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலையாகி அதனை மறுக்க தவறிவிட்டனர். எனவே வா.சா–1ன் சாட்சியத்திலிருந்தும், வா.சா.ஆ.1 ஆவணத்திலிருந்தும் வழக்கு சொத்து முனி என்ற ரமணிக்கு சொந்தமானது என முடிவு காணபப்டுகிறது. முனி என்ற ரமணி தனது பெயரில் வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 மூலம் தீர்வை வரியும், வீட்டு வரியும் செலுத்தி வந்துள்ளார். வா.சா.ஆ.4 நிலபதிவேட்டு நகல் முனி என்ற ரமணி பெயரில் பதிவு ஏற்பட்டுள்ளது. எனவே வழக்கு சொத் வா.சா.ஆ. 1 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் மூலம் முனி என்ற ரமணிக்கு சொந்தமானது என பிரச்சனை எண். 1க்கு முடிவு காணப்படுகிறது,

**<u>8. பிரச்சனை எண். 2</u>**

முனி என்ற ரமணி 23.06.2011 அன்று இறந்துவிட்டார் என்பது வா.சா.ஆ.5 இறப்புச்சான்றிதழ் மூலம் தெரிய வருகிறது. மேற்கண்ட முனி என்ற ரமணிக்கு 1 ஆம் வாதி, 5 ஆம் பிரிதிவாதி, தாய்மானரகுநாதன் மற்றும் ரவீந்திரநாதன் ஆகியோர் குழந்தைகள் என்பதும், முனி என்ற ரமணியின் பெற்றோர்களான ராக்கப்பன் சேர்வை, பார்வதி அம்மாள் ஏற்கனவே இறந்துவிட்டார்கள் என்பதும், இவருடைய தகப்பனார்

ராக்கப்பன் சேர்வை, பார்வதி அம்மாள் இறப்பதற்கு முன்னரே இறந்துவிட்டார் என்பதும் வா.சா.ஆ.6 ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது. எனவே வா.சா.ஆ.6 வாரிசுரிமை சான்றிதழ் வா.சா.1 சாட்சியத்தை உறுதிபடுத்துகிறது. வா.சா.1ன் சாட்சியத்திலிருந்தும், இறந்துபோன முனி என்ற ரமணிக்கு 1 ஆம் வாதியும், 5 ஆம் பிரதிவாதி, தாய்மானரகுநாதன், மற்றும் ரவீந்திரநாதன் ஆகியோர் வாரிசுகள் என்பது நிலைநாட்டப்பட்டுள்ளது. மேலும் ரவீந்திரநாதன் 03.01.2015 தேதியில் இறந்துபோய்விட்டார் என்பதும் அவருடைய வாரிசுகள் 2 முதல் 4 வாதிகள் என்பதும் வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆவணங்கள் மூலம் துலங்குகிறது. வா.சா.1–ன் சாட்சியத்தின் மூலம் வா.சா.–1ன் உடன் பிறந்த சகோதரர் ரகுநாதன் 20.10.2018 அன்று இறந்துவிட்டார் என்பதும் அவருடைய வாரிசுகள் 1 முதல் 4 பிரதிவாதிகள் என்பதும் தெரிய வருகிறது.

மேற்கண்ட சாட்சியங்களை மறுக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவரும் முன்னிலையாகவில்லை. எனேவ வா.சா.1–ன் சாட்சியத்திலிருந்தும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 8 வரையிலான ஆவணங்களிலிருந்தும் இறந்துபோன முனி என்ற ரமணிக்கு 1 ஆம் வாதி, 5 ஆம் பிரதிவாதி, ரகுநாதன் மற்றும் ரவீந்திரநாதன் ஆகியோர் மக்கள் என்பதும், இதில் ரவீந்திரநாதன் 03.01.2015 அன்று 2 முதல் 4 வாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்பதும், ரகுநாதன் 29.10.2018 தேதியில் 1 முதல் 4 பிரதிவாதிகளை வாரிசுகாளக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்பதும் வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே முனி என்ற ரமணியின் வாரிசுதாரர்கள் என்ற நிலையில் வழக்குரை சொத்தில் 1 ஆம் வாதிக்கு 1/4 பாக உரிமையும், 2 முதல் 4 வரையிலான வாதிகள் அனைவருக்கும் சேர்த்து 1/4 பாக உரிமையும் ஆக மொத்தம்

வாதிகளுக்கு 1/2 பாக உரிமையும், 1 முதல் 4 பிரதிவாதிகள் அனைவருக்கும் சேர்த்து 1/4 பாக உரிமையும், 5 ஆம் பிரதிவாதிக்கு 1/4 பாக உரிமையும் வாரிசு உரிமை மூலம் ஏற்பட்டுள்ளது என்பது வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று பிரச்சனை எண். 2 க்கு முடிவு காணப்படுகிறது.

**9. பிரச்சனை எண்.3**

வழக்குரை சொத்தில் 1 ஆம் வாதிக்கு 1/4 பாகமும் 2 முதல் 4 வாதிகளுக்கு 1/4 பாகமும் ஆக மொத்தம் அனைவருக்கும் சேர்த்து 1/2 பாகம் உரிமை உள்ளது என பிரச்சனை எண்.2 க்கு முடிவு காணப்படுகிறது. வழக்கு சொத்தின் பட்டா கூட்டுப்பட்டா வாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ளது வா.சா,ஆ.9 மூலம் தெரிய வருகிறது. வாதிகளின் வழக்குரையில் உள்ள சொத்தை பாக பிரிவினை செய்து தர கோரி பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.17 மூலம் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளனர். அந்த அறிவிப்பை 2 முதல் 4 பிரதிவாதிகள் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பியுள்ளனர். எனவே வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்குள் 1/2 பாக உரிமையை தனித்து பாகப்பிரிவினை செய்து தனித்து பாகம் கோருவதற்கு வாதிகளுக்கு உரிமை உள்ளது என பிரசச்னை எண்.3 க்கு தீர்வு காணப்படுகிறது–

10. முடிவாக, வாதிகளுக்கு வழக்குரை சொத்தில் 1/2 பாக உரிமை உள்ளது என தீர்ப்பளித்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது. இறுதிநிலை தீர்ப்பாணை நடவடிக்கைக்கு தேவைப்படும் தரப்பினர் விண்ணப்பித்து கொள்ளலாம் எனவும் தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கு காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்படுகிறது. தரப்பினர்களின் உறவு முறையை கருத்தில் கொண்டு செலவுத்தொகையை பொறுத்து

உத்தரவு இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2021ம் ஆண்டு நவம்பர் திங்கள் 20ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-).ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

<u>வாதி தரப்பு சாட்சிகள்:</u>

வா.சா.1 – திரு. ராமமூர்த்தி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>

| | | |
|---|---|---|
| 1. வா.சா.ஆ.1 | – | 13.07.1970 தேதியிட்ட ஆவண எண்.1950-ல் பதிவு செய்யப்பட்ட பாக பாத்திய விடுதலை பத்திரத்தின் நகல். |
| 2. வா.சா.ஆ.2. | – | 24.10.2017 தேதியிட்ட ரமணி பெயரில் ஏற்பட்ட தீர்வை ரசீது . |
| 3. வா.சா.ஆ.3. | – | 23.01.2018 தேதியிட்ட ரமணி பெயரில் ஏற்பட்ட தீர்வை ரசீது . |
| 4. வா.சா.ஆ.4. | – | 06.01.2017 தேதியிட்ட நிலப்பதிவேட்டின் உண்மை நகல். |
| 5. வா.சா.ஆ.5. | – | ரமணி என்பவரது இறப்புச்சான்றிதழின் புகைப்பட நகல். |
| 6. வா.சா.ஆ.6. | – | 07.05.2013 தேதியிட்ட ராக்கப்பன் சேர்வை என்பவரது வாரிசுரிமை சான்றிதழின் புகைப்பட நகல். |
| 7. வா.சா.ஆ.7. | – | ரவீந்திரநாதன் என்பவரது இறப்புச்சான்றிதழின் புகைப்படநகல். |
| 8. வா.சா.ஆ.8. | – | ரவீந்திரநாதன் என்பவரது வாரிசுரிமைச்சான்றிதழின் புகைப்பட நகல். |
| 9.வா.சா.ஆ.9 | .. | 08.03.2018 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவின் புகைப்பட நகல். |
| 10.வா.சாஆ.10 | .. | 1 ஆம் வாதியின் குடும்ப அட்டையின் புகைப்பட நகல். |
| 11.வா.சா.ஆ.11 | .. | 1 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல். |

| | | |
|---|---|---|
| 12.வா.சா.ஆ.12 | .. | 2 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல். |
| 13.வா.சா.ஆ.13 | .. | 3 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல். |
| 14.வா.சா.ஆ.14 | | 4 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டையின் புகைப்பட நகல். |
| 15.வா.சா.ஆ.15 | | ராதிகா தையலகம் என்ற பெயரில் உள்ள வண்ண புகைப்பட நகல். |
| 16.வா.சா.ஆ.16 | | 09.06.2017 வழக்கு சொத்தின் வழிகாட்டு மதிப்பீட்டின் புகைப்பட நகல். |
| 17.வா.சா.ஆ.17 | | 08.02.2021 அன்று வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் . |
| 18.வா.சா.ஆ.18 | | 3 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் திரும்பி வந்த தபால் அஞ்சல் உறை. |
| 19.வா.சா.ஆ.19 | | 4 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் திரும்பி வந்த தபால் அஞ்சல் உறை. |
| 19.வா.சா.ஆ.20 | | 2 ஆம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் திரும்பி வந்த தபால் அஞ்சல் உறை. |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை.</u>

(ஒம்/−).ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.